செ.வெ.எண். 69/மார்ச்                                                                 தேதி : 30.03.2017

# தருமபுரி மாவட்டத்தில் சீமை கருவேல மரங்களை அகற்றுதல் குறித்து ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் சீமை கருவேல மரங்களை அகற்றுதல் குறித்து ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் இன்று (30.03.2017) நடைபெற்றது. 9566874323

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் மாதாந்திர வங்கியாளர்கள் ஆய்வு கூட்டத்தில் சீமைகருவேல மரத்தை அகற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு வங்கியாளர்கள் தங்கள் சமூக பொறுப்பு நிதியிலிருந்து உதவுமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். மேலும் இதன் தொடர்பாக சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதற்கான (மாவட்ட பொறுப்பாளர்) வழக்கறிஞர் திரு. குமரவேலன் (ஆணையாளர்) அவர்கள் சென்னை உயர்நீதிமன்ற ___ மதுரை கிளையின் உத்தரவினை ஏற்று நமது மாவட்டத்திற்கு சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதற்கு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் மாவட்ட ஆட்சியர் ஏப்ரல் 01.04.2017 முதல் பொது விநியோக திட்டத்தின்கீழ் ஸ்மார்ட் அட்டை பெறுவதற்கான வசதியினை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளம்பர பதாகைகளை வெளியிட்டு வங்கியாளர்கள் தங்கள் கிளைகளில் விளம்ரப்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், நபார்டு வங்கி மேலாளர் திரு. பார்த்தசாரதி, திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திருமதி. ஆர்த்தி, இந்தியன் வங்கி மண்டல மேலாளர் திரு. சூரிய நாராயணன், உதவி பொது மேலாளர் (RBI) திரு. ரவீந்திரன், முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.